## சாட்சியின் வாக்குமூலம்

## திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்

**அசல் வழக்கு எண் : 113/2012**

DW1 – **திரு.யுவராஜன் த/பெ.சங்கர்**

**25.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வட்டம் | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**குறுக்கு விசாரணை :**

**நேரம் 16.00 மணி**

இந்த வழக்கின் வாதி மூர்த்தி என்னுடைய தாய்மாமா ஆவார். 1 ஆம் பிரதிவாதி என் அம்மாவின் அப்பா, என் தாய்வழி தாத்தா ஆவார். 2 ஆம் பிரதிவாதி அன்புசெல்வி மற்றும் 3 ஆம் பிரதிவாதி சங்கர் என் தாய் மற்றும் தந்தை என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி காசிராஜன், 3 ஆம் பிரதிவாதி சங்கர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை மூர்த்தி எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் எங்கள சொத்தில் 3 ல் 1 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு தமிழ் தெரியும். என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியும். நான் B.Tech படித்துள்ளேன். இந்த வழக்கில் என் அம்மா தாக்கல் செய்துள்ள பதிலுரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் தாயார் நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார் என்றால் சரிதான். என் தாயாரை விசாரிக்காமல் என்னை விசாரிக்க என்ன காரணம் என்றால் அவருக்கு வயது 60 க்கு மேல் ஆகிவிட்டது. அவருக்கு Sugar & BP உள்ளது. என் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களில் எதிலும் நான் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். அந்த ஆவணங்களின் விவரம் எனக்கு தெரியும். எத்தனை சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என்றால் A to F வரையிலான அட்டவணை சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

A to F வரையிலான அட்டவணை சொத்துக்களுக்கு என் தாயார் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்என்ற விவரம் எனக்கு தெரியும். என் பாட்டி குமுதா எப்போது இறந்தார் என்றால் 1996 ஆம் வருடம் இறந்தார். என் அம்மா திருமணமான பிறகு அவருடைய தந்தை காசிராஜனுடன் நல்ல உறவுமுறையில் இருந்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்புவரை என் தாயார் அன்புசெல்வி மூர்த்தி மற்றும் என் தாத்தா எங்கு வசித்து வந்தார்கள் என்றால் என் அம்மாவிற்கு 17 வயதில் திருமணமாவதற்கு முன்புவரை KC கார்டன் பழைய எண் 15 புதிய எண் 37, 2வது தெரு, பெரவள்ளூர் சென்னை 82 ல் வசித்து வந்தார். என் தாயாருக்கு 1982ல் திருமணமானது. காசிராஜன் எங்கு இறந்தார் என்றால் ஆற்காட்டில் உள்ள எங்கள் வீட்டில் இறந்தார். KC கார்டன் உள்ள வீட்டில் தற்போது யார் இருக்கிறார்கள் என்றால் என் தாத்தாவை வெளியேற்றிவிட்டு என் மாமா மூர்த்தி தற்போது வசித்து வருகிறார். இந்த வழக்கை தவிர வேறு என்ன வழக்குகள் உள்ளன என்றால் அசல் வழக்கு எண் 2298/2010 City Civil Court, Chennai, இந்த வழக்கும் மற்றும் 3 மாதங்களுக்கு முன்பதாக ஒரு கிரிமினல் வழக்கு முடிவுற்றது. என் தந்தை அரசு ஊழியர் என்றால் சரிதான். அவர் தனது பெயரிலோ அவரது மனைவி பெயரிலோ சொத்து வாங்கவேண்டும் என்றால் முன் அனுமதி பெறவேண்டும் மற்றும் அரசிற்கு தெரிவிக்கவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்கள் அனைத்தும் ஒரே வருடகாலத்திற்குள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எந்தெந்த வருடத்தில் வாங்கப்படடது என்றால் அட்டவணை சொத்து A தண்ணீர்குளம் திருவள்ளூர் மாவட்டம் 2005ல் அரசாங்க ஊழியர்களுக்கு Housing Board சொத்தாகும். அட்டவணை B சொத்து 36 சென்ட் 2006ல் என் தாத்தா என் அம்மாவிற்கு சேர வேண்டிய பாகத்தில் பணம் கொடுத்து வாங்கப்பட்டது. அட்டவணை C சொத்து 2006ல் என் தாத்தா கொடுக்க பங்கு பணத்திலிருந்து வாங்கப்பட்டது. அட்டவணை D சொத்து 2006ஆம் வருடம் ஸ்ரீபெரும்புதூரில் 2 பிளாட்கள் 2448 சதுரடி என் தாத்தா கொடுக்க பங்கு பணத்திலிருந்து வாங்கப்பட்டது. அட்டவணை E சொத்து 1988ல் எனது சித்தப்பா மூலமாக என் தந்தை வழி பாட்டிக்கு வாங்கப்பட்ட சொத்தாகும். அட்டவணை சொத்து F தங்கம் நகைகள் மற்றும் வெள்ளி பொருட்களாகும். மேற்படி அட்டவணை உள்ள வழக்கு சொத்துக்களுக்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண

வாக்குமூலத்தில் அட்டவணை A to D சொத்துக்கள் ஒரே வருடத்தில் வாங்கப்பட்ட சொத்து என கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தான் தவறாக கூறுகிறேன் என்றாலும் ஆவணங்களின் படி 12 மாதங்கள்ளாக வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. பதிலுரையில் அட்டவணை A,B,C,D சொத்திற்கான ஒரே விளக்கத்தை என் தாயார் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அட்டவணை A சொத்தில் என் தாயார் என்ன காரணம் கூறியுள்ளார் என்றால் என் தந்தைக்கு வீட்டு வசதி நலவாரியத்தால் கொடுக்கப்பட்ட சொத்தாகும். என் தந்தை அதை EMI கட்டி வாங்கினார். அட்டவணை சொத்து B, C, D ஆகியவை எவ்வாறு வாங்கப்பட்டது என்றால் என் தாயாருக்கு வந்த பங்கில் வாங்கப்பட்டது.

**நேரம் 16.25 மணி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.